**சார்பு நீதிமன்றம், சீர்காழி.**

S.C. 29/2024

2025 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 23 ம் நாள் செவ்வாய் கிழமை PW4 இன் வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்தியசாட்சிய சட்டப் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திருமதி. S.மும்தாஜ், B.Sc.,B.L., சார்பு நீதிபதி, சீர்காழி அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு, பதிவு செய்யப்படுகிறது.

Deposition of LW2 examined PW4

| | | |
|---|---|---|
| Date | : | 23.09.2025 |
| Name | : | சங்கர் |
| Husband Name/Father Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Post | : | |
| Age | : | |

Accused absent. Petition filed and allowed.

**<u>சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை</u>**

நான் தற்போது நாங்கூரில் வசித்து வருகிறேன். கொத்தனார் வேலை செய்து செய்து வருகிறேன். இலக்கியராஜ் என்பவரை தெரியும். முத்துக்கிருஷ்ணனை தெரியாது. வழக்கு பற்றி எதுவும் தெரியாது. போலிசார் விசாரித்துக் கொண்டிருந்ததைபார்த்தேன். என்ன வழகக்கு எப்போது நடந்து என்பது பற்றி தெரியாது. போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அனுமதி கோரியதன் பெயரில் அனுமதி வழங்கப்பட்டது.**

**அரசுதரப்பு குறுக்குவிசாரணை**

கடந்த 25.11.2023 ம் தேதி சுமார் 1 மணியளவில் டீ கடைக்கு சென்று டீ குடித்து விட்டு எனது அம்மா மற்றும் அண்ணனுடன் பேசிக் கொண்டிருந்த போது அப்போது எங்கள் ஊரை சேர்ந்த இலக்கியராஜ் என்பவர் அங்கு கையில் அரிவாளுடன் நின்று கொணண்ருந்தார் என்றும் அவர் அ.சா.1 னை பார்தது தாகாத வார்த்தைகளால் திட்டி என்னை ஏன் ஒரு மாதிரி பார்க்கிறாய் என்று திட்டியும் அ.சா. 1 ன் கழுதிதில் அரிவாளை வைத்து அ.சா. 1 சட்டை பையில் வைத்திருந்த 200 ரூபாயை எடுத்துக் கொண்டு என்னை பற்றி தெரியுமாடா நான் தான்டா ரவுடி இலக்கியராஜ் என்னை

கண்டாலே அளறனும் நீ என்னடா என்னை முறைக்கிறாய் என்று கூறி மரியாதையாய் இந்த இடத்தை விட்டு ஓடு என்று கூறினார்என்றும் அ.சா. 1 டீ கடையில் நின்றதால் அவர் தான் கையில்வைத்திருந்த அ ரிவாளர் இத்தோடு தொலைந்து போடாஎன்று அ.சா. 1 ஓங்கி வெட்டவே நான் விலகி விட்டேன் என்றும் இல்லை என்றால் அரிவாள் அ.சா. 1 கழுத்தில் வெட்டியிருக்கும் என்றும் இங்கு நடந்ததை யாரிடமாவது கூறினால் இந்த பக்கம் வரும் போது அரிவாளளால் உன்னை வெட்டி கொன்று விடுவேன் என்று தன் கையில் வைத்திருந்த அரிவாளை காட்டி சென்று விட்டார் என்றும் அ.சா. 1 பயந்து போய் வீட்டிற்கு வந்து விட்டார் என்றும் அதன் பின்னர் இது சம்பந்தமாக புகார் கொடுத்தாக அ.சா.1 கூறினார் என்றாலும் சம்பவத்தை நேடியாக பார்த்து விட்டு போலி விசாரணையிலும் சொல்லிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.